**தலைப்பு 8 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 8 - தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 14 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்காக ஓதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 88.85 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 85.35 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 3.50 மில்லியன் அதாவது 3.94 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 85.80 | 82.63 | 3.17 | 3.69 |
| மூலதனம் | 3.05 | 2.72 | 0.33 | 10.82 |
| மொத்தம் | 88.85 | 85.35 | 3.50 | 3.94 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 00801 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.00 | 1.47 | 1.30 | 1.71 | 7.00 | 5.61 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 150,000 தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2015 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த புத்தகங்களிலிருந்து அகற்றப்பட வேண்டிய பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 770 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயலாற்றல்

**முறைப்பாட்டு புலனாய்வு**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுமக்கள் முறைப்பாடுகளின் புலனாய்வு

இந்த பணியை நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழுவினால் தனியான பொதுமக்கள் முறைப்பாட்டு புலனாய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்த பிரிவினால் 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கும் 9 மாகாண அலுவலகங்களுக்கும் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான தகவலின் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| முறைப்பாடுகளின் தன்மை | 2016 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொலிஸினால் நடவடிக்கை எடுக்காமை | 737 | 150 |
| தாக்குதல் | 46 | 10 |
| சித்திரவதை செய்தல் | 18 | 02 |
| அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 486 | 113 |
| பெண்களையும் சிறுவர்களையும் துன்புறுத்துதல் | 09 | 108 |
| ஏனைய | 150 | 34 |
| இலஞ்ச ஊழல் | 10 | 02 |
| பக்கச் சார்பு | 257 | 08 |
| பொய்க்குற்றம் சாட்டுதல் | 112 | 19 |
| பொலிஸ் கைது செய்த நிலையில் மரணம் ஏற்படல் | 03 | - |
| சட்டரீதியற்ற வகையில் தடுத்துவைத்தல் | 51 | 21 |
| மொத்தம் | 1879 | 467 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறைப்பாடுகளின் தன்மையின் பிரகாரம் தீர்வுகாணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பாக வகைப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ii) தலைமை அலுவலகத்தின் மூலமும் மாகாண அலுவலகங்களின் மூலமும் மேற்கூறப்பட்ட முறைப்பாடுகளில் 971 அதாவது 52 சதவீதத்திற்கு தீர்வு காணப்பட்டிருந்ததுடன் 908 முறைப்பாடுகள் அதாவது 48 சதவீதம் புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் தலைமை அலுவலக மட்டத்திலும் மாகாண அலுவலக மட்டத்திலும் புலனாய்வு செய்யப்பட்டிருந்த முறை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்ட | | தீர்வு காணப்படாத | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| தலைமை அலுவலகம் | 186 | 64 | 34 | 122 | 66 |
| மாகாண அலுவலகங்கள் | | | | | |
| மேல் | 599 | 153 | 26 | 446 | 74 |
| மத்திய | 221 | 111 | 50 | 110 | 50 |
| வடமேல் | 140 | 130 | 93 | 10 | 7 |
| தென் | 277 | 211 | 76 | 66 | 24 |
| வடமத்திய அனுராதபுரம் | 91 | 80 | 88 | 11 | 12 |
| யாழ்ப்பாணம் | 26 | 20 | 77 | 6 | 23 |
| ஊவா | 127 | 82 | 65 | 45 | 35 |
| சப்ரகமுவ | 111 | 76 | 68 | 35 | 32 |
| கிழக்கு | 101 | 44 | 44 | 57 | 56 |
| மொத்தம் | 1879 | 971 | 52 | 908 | 48 |

(ஆ) நிறுவன ரீதியான மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு

பொலிஸ் சேவையில் அரசால் அறிவிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொகுதியில் உள்ளடங்குகின்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி முதல் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் வரையும் அரசால் அறிவிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொகுதியில் உள்ளடங்காத பொலிஸ் கொஸ்தாபல் முதல் பிரதான பொலிஸ் பரிசோதகர் வரையான உத்தியோகத்தர் குழுக்களை ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல் பதவியுயர்வு வழங்குதல் இடமாற்றம் செய்தல், சேவையில் உறுதிப்படுத்துதல், சேவையை நீடிப்புச் செய்தல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் ஓய்வுபெறச் செய்தல் போன்ற சகல விடயங்கள் தொடர்பாகவும் கொள்கையொன்றைத் தயாரிக்கும் செயற்பாடுகளை முறையானதாக நிறைவேற்றுவதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் நிறுவன மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசால் அறிவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்

மீளாய்வாண்டின் போது ஒழுக்காற்று விசாரணைக்காக கிடைக்கப்பெற்ற கோவைகளின் எண்ணிக்கை 202 ஆக இருந்ததுடன் அதில் 44 கோவைகள் அதாவது 22 சதவீதம் ஒழுக்காற்று விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. 2017 மே 30 இல் ஒழுக்காற்று விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு கட்டளை விநியோகிக்கும் எதிர்பார்ப்பில் 05 கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ஒழுக்காற்று கட்டளை விநியோகிக்கும் எதிர்பார்ப்பில் காணப்படுகின்ற கோவைகள், வரைவு குற்றப் பத்திரிகை பெறப்பட்ட எண்ணிக்கை மற்றும் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற கோவைகளின் எண்ணிக்கை 153 அதாவது 76 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) அரசாங்கம் அறிவிக்காத உத்தியோத்தர்கள் சேவையை விட்டுச்செல்லல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக எழும் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீட்டு விசாரணை

அரசால் அறிவிக்காத உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்லல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக எழும் மேன்முறையீடுகளின் விசாரணை நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **சேவையை விட்டுச் செல்லல்** | **ஒழுக்காற்று நடவடிக்கை** | **மொத்தம்** |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது புலன்விசாரணை செய்ய வேண்டிய மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 1368 | 1710 | 3078 |
| ஆண்டின் போது பொலிஸ் மா அதிபரின் மேன்முறையீட்டிற்காக அறிக்கை பெறப்பட்ட எண்ணிக்கை | 1049 | 791 | 1840 |
| மீளாய்வாண்டின் இறுதியின் போது அறிக்கை கிடைக்காமையின் அடிப்படையில் புலனாய்வு விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாத மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 319 | 919 | 1238 |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 21 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 50 | 48 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 16 | 15 | 01 |
| | மொத்தம் | 96 | 87 | 09 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையில் ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட நிலையில் 19 உத்தியோகத்தர்களும், இரண்டாம் நிலையில் 02 உத்தியோகத்தர்களும் மற்றும் ஆரம்ப நிலையில் ஒரு உத்தியோகத்தரும் உள்ளடங்கியிருந்தனர்.

(ஆ) மேல்மாகாண அலுவலகம் தவிர்ந்த ஏனைய 08 மாகாண அலுவலகங்களிலும் கடமைச் செயற்பாடுகளை மேவுகை செய்வதற்காக 08 மாகாண பணிப்பாளர்களும், 03 புலனாய்வு உத்தியோகத்தர்களும் மற்றும் 04 அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களும் ஆக ஒட்டுமொத்தமாக 15 பதவியணியினர் மாத்திரம் சேவையாற்றுவதுடன் ஒரு மாகாண அலுவலகத்திற்கு மாகாண பணிப்பாளர் ஒருவர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார்.